# ஆண்டின் பொதுக்காலம் 18 ஆம் வாரம்

*திருவழிப்பாட்டு ஆண்டு* B *(02-08-2015)*

### *திருப்பலி முன்னுரை - 1*

இறைத்திருமகன் இயேசுவின் அன்பில் அவருடைய புனித நாளாகிய இன்று ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் உங்கள் அனைவருக்கும் அன்பான வாழ்த்தைக் கூறிக்கொள்கிறேன். திருமகன் இயேசு இன்று தன்னுடைய மானுட வருகையை இறைத்திருவுளப்படி சிறந்த ஈகம் நிறைந்த ஒரு செயல்பாடாயிருக்கிறது என்பதை நமக்கு விளக்குகிறார். படைப்பின் தொடக்கத்திலிருந்தே இறைவனால் வழங்கப்பட்ட தலைசிறந்த மீட்பின் திட்டத்தின் செயல்வடிவம்தான் அது.

இயேசுவுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் பதினெட்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு நிலைவாழ்வுக்கான உணவைத் தேட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசு செய்த அற்புதத்தால் அப்பங்களை வயிறார உண்ட மக்கள், மீண்டும் உணவைத் தேடி இயேசுவிடம் செல்கின்றனர். இயேசு அவர்களிடம், தானே வாழ்வு தரும் உணவு என்று எடுத்துரைக்கிறார். மனித உடல் எடுத்த இறைமகன் இயேசு, நற்கருணை வடிவில் தன்னையே நமக்கு உணவாகத் தருகிறார். நமது ஆன்மத் தேவைகளுக்காக நிலைவாழ்வு அளிக்கும் உணவாம் இயேசுவைத் தேடும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

### **திருப்பலி முன்னுரை -2**

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நம் பசியையும், தாகத்தையும் தணிக்கும் நம் இறைவனின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத்திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று பொதுக்காலம் பதினெட்டாம் ஞாயிறு.

கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி, தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்துவிடுங்கள். என்னும் அழைப்பை இன்றைய இறைவார்த்தைகள் மூலமாக நாம் பெற்றுக்கொள்ளுகின்றோம். அத்தோடு இறைவனின் இரக்கமே என்றும் நம்மை வாழ்விக்கின்றது என்னும் உண்மையும் உணர்த்தப்படுகின்றது. எனவே நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழவும் கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்துகொண்டு புதுப்பித்துப் பகிரும் இறைமக்களாக வாழ இத்திருப்பலியில் வரங்கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

**எம் திருச்சபை வழிநடத்தும் அனைவருக்காக:**
வாழ்வு தருபவராம் இறைவா, உமது அருள் நலன்களால் ஊட்டம் பெற்று, திருச்சபை செழித்தோங்க உழைக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இறைமக்களின் ஆன்மத் தேவைகளை நிறைவேற்றுபவர்களாய் செயல்பட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நாட்டிற்காக:**
உம் படைப்புகளைப் பலுகிப் பெருகச் செய்யும் எம் இறைவா! எமது நாட்டு அரசியல் அவலங்களால் பசி, பட்டினி, நோய்கள், குடிபோதை என்று பாதிக்கப்பட்டு அவதியுறும் எம் ஏழை ஏளிய மக்களை பாரும். அவர்கள் வாழ்க்கை நிலை மேலோங்கி எல்லாரும் நலம் வாழ பகிர்ந்தளிக்கு நல்ல மனதினை தரவேண்டுமென்றும், உம்முடைய மக்களாகிய நாங்களும் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழவும், கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்துகொண்டு புதுப்பித்துப் பகிரும் இறைமக்களாக வாழவும் வேண்டிய நன் மனதை எமக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மக்களுக்காக:**
எல்லாம் வல்லவரான தந்தையே இறைவா! உம்முடைய மக்களாகிய நாங்களும் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழவும். முழு மனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள வேண்டிய நன்மனதை எமக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மனித நேயம் மண்ணில் மலர்ந்திட:**
பண்பாளரே எம் இறைவா! நான் மட்டும் பகிர்வதால் என்ன செய்ய முடியும் என்ற எதிர்மறை எண்ணங்களிலிருந்து எம்மை விடுவித்து பகிர்வு மனப்பான்மை வளரவும், உம் திருமகன் இயேசுவைப்போல் பகிர்ந்துண்டு வாழும் அவரின் சிறந்த சீடர்களாக எம் அயலாருடன் இணைந்து வாழ்ந்திடவும், உலக நாடுகளிலே உணவின்றியும், போதிய மருத்துவ வசதியின்றியும் அல்லலுறும் அனைவரையும் காத்து, அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இளைய சமுதாயத்திற்காக :**

எங்கள் அன்பு தந்தையே இறைவா! உமது பிள்ளைகள் இளையோராகிய நாங்கள் எமது தேவைகளில் முதன்மையான தேவை நீரே என்று உணர்ந்து நாங்கள் முழுமையாக உம் கரம் பற்றிக் கொள்ளவும், நிலைவாழ்வுப் பெற்று உம்மை அடையவும், உலகெங்கும் வன்முறை, தீவிரவாதம், உள்நாட்டு கலவரம், பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளோர் உமது உதவியை நாடவும், தீமையை வெறுத்து, நன்மையையும், நீதியையும் தேடி நல்ல வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**முதியோர்களுக்காக :**

அன்பின் இறைவா! உம் மக்கள் இன்றைய சூழலில் வயது முதிர்ந்தவர்களை பேணி காக்கும் நிலைமாறி, முதியோர் இல்லங்கள் பெருகிவரும் நிலையில் அவர்களுக்கு நீர் தந்தையாகவும், தாயாகவும் நின்று, தாங்கள் கடந்து வந்த பாதையைக் குறித்து அவர்கள் துன்புறும் வேளையில் அவர்களுக்கு அன்பினை பொழிந்து அரவணைத்தும் நல் ஆயனாக இருந்து வழி நடத்திட வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.